# யாப்பியல் நோக்கில் சங்க இலக்கியங்கள்

*முனைவர் க. கலாவதி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயம்புத்தூர்

மலர்: 4
இதழ்: 3
மாதம்: ஜனவரி
வருடம்: 2020
P-ISSN: 2454-3993
E-ISSN: 2582-2810

சங்ககால இலக்கியங்கள் அகவல், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா எனும் பாக்களால் பாடப்பட்டன. கலித்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு ஆகிய நூல்களில் வெண்பாக்கள் இடம் பெற்றுள்ளன. தனித்தன்மை பெற்றிலங்கவில்லை. கலிப்பாவில் கலித்தொகை அமைந்து உள்ளது. வஞ்சிப்பாவில் வஞ்சி இலக்கியம் தோன்றவில்லை. சங்க இலக்கியங்களில் ஆசிரியப்பாக்கள் மிகுதியாக உள்ளன. அதில் தனித்தன்மையுள்ள ஆசிரியப்பாக்களும், ஆசிரியத்தில் விரவிய வஞ்சியடிகளும், வஞ்சியில் விரவிய ஆசிரிய அடிகளுமுள. யாப்பியல் நோக்கில் சங்க இலங்கியங்கள் என்ற பொருளில், ஆசிரியப்பாவை மட்டும் ஆய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

## பாவின் தோற்றம்

பா என்பது ஓசையை அடிப்படையாகக்கொண்டது. தொடக்க காலத்தில் தமிழ்ப் பாடல்கள் வாய்மொழி மரபுப் பாடல்களாகவே அமைந்திருந்தன. செவிவழியாகக் கேட்டுப்பாடலின் வடிவத்தையும் பொருளையும் உணர்ந்து கொண்டனர். பாடலின் ஓசையே அப்பாடலின் வடிவத்தினை உணர்த்தியது. இதனால் ஓசை பாவடிவத்தினை இனங் காட்டும் அடிப்படையாக அமைந்தது.

## அடியும் பாவகையும்

தொல்காப்பியர் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா, என்ற நான்கினைக் கூறுகின்றார். இவற்றுள் வஞ்சிப்பா ஆசிரியத் துள்ளும், கலிப்பா வெண்பாவினுள்ளும் அடங்கும் என்றார். தொல்காப்பியர் எழுத்தெண்ணிக் குறிப்பிடும் குறளடி, சிந்தடி, நேரடி (அளவடி) நெடிலடி, கழிநெடிலடி ஆகிய ஐந்தும் நாற்சீர் கொண்ட அடியின் உள்வகைகளேயாகும். பிற்கால யாப்பியலார் இவற்றைச் சீர் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுச் சொன்னது பொருந்தாது.

தொல்காப்பியர், சீரடிப்படையுடைய அடிகளைக் குறிப்பிடும்பொழுது முச்சீரடி, ஐஞ்சீரடி, அறுசீரடி, எழுசீரடி, முடுகியலடி என்று தான் பெயர் சுட்டுகிறார். குறளடியாவது இருசீரடி, சிந்தடியாவது முச்சீரடி எனத் தொல்காப்பியர் எங்கும் குறிக்கவில்லை. கட்டளை அடிகள் ஐந்தும் சீர்வகை அடிகள் ஐந்தும் ஆசிரியப்பாவிற்கு உரியன என்கிறார் தொல்காப்பியர். பொதுவாக ஆசிரியப்பா நாற்சீரடி உடையன. எனினும் இவற்றில் வேற்றுசீர் அடிகளும் கலந்து வரும் நிலையைத் தொல்காப்பியர் விளக்கிக் கூறுகிறார். ஆசிரியப்பாவின் ஈற்றியலடி முச்சீராய் அமையும் ஒருசில நேரங்களில் அதன் இடையடிகளுள் சில முச்சீராய் வரும். இதனைத் தொல்காப்பியர்,

**ஈற்றயல் அடியேஆசிரியமருங்கின்**
**தோற்றம் முச்சீர்த்துஆகும் என்ப**
**(தொல். செய்யு -1325)**

**இடையும் வரையார் தொடைஉணர் வோரே**
**(தொல். செய்யு -1326)**

நூற்பாக்களின் மூலம் விளக்குவார். பாவின் வேறுபாட்டிற்கும் பாவின் வகைவேறு பாட்டிற்கும் அடிப்படையாக அமைவது “அடி” என்னும் உறுப்பாகும்.

### ஆசிரியப்பாவின் ஓசைநலம்

தொல்காப்பியர் அகவற்பாவின் ஓசையைச் சுட்டுகையில் அகவல் என்பது ஆசிரியம்மே (தொ. செ. 80) என்றார். அகவிக் கூறுதலான் கேட்ப அவற்கு ஒன்ற செப்பிக் கூறாது தாங்கருதியவாறெல்லாம் வரையாது சொல்லுவ -தோராறும் உண்டு. அதனை வழக்கிலுள்ளார் அழைத்தலென்றுஞ் சொல்லும். அங்ஙனஞ் சொல்லுவார் சொல்லின் கண் எல்லாந் தொடர்ந்துகிடந்தஓசைஅகவலெனப்படும். அவைஇ தச்சுவினைமாக்கள் கண்ணும், கட்டுங்கழங்கு மிட்டுஉரைப்பார் கண்ணும் தம்மில் உறழ்ந்துரைப்பார் கண்ணும் கேட்கப்படும். கழங்கிட்டுரைப்பார் அங்ஙனமே வழக்கினுள்ளதாய்க் கூறும் ஓசை ஆசிரியப் பாவெனப்படும் என்றார் தொல்காப்பியர். தொல்காப்பியர் அகப்பொருளைப் பாடுவதற்குச் சிறப்புடையயாப்புவடிவமாகக்கலிப்பாவையும், பரிபாடலையும் குறிப்பிடுவார். இதனை,

**கலியேபரிபாட்டுஆயிருபாங்கினும்**
**உரியதாகும்என்மனார் புலவர்**
**(தொல். பொருள்: 999)**

என்ற நூற்பா மூலம் குறிப்பிடுவார். ஆனால் சங்ககால அகப் பாடல்கள் நேரிசை ஆசிரிய யாப்பில் மிகுதியாக இயற்றியிருத்தல் நோக்கத்தக்கது. ஆகப்பொருள் மட்டுமின்றி புறப்பொருள் பற்றியும் ஆசிரியயாப்பினைப் பயன்படுத்திருப்பது, தொல்காப்பியரின் இலக்கிய மரபு நெகிழ்ந்து புதிய இலக்கிய மரபு தோன்றியதே இதற்குக் காரணம் எனலாம். வஞ்சியடி விரவிவந்த பதினெட்டு ஆசிரியப் பாக்களில் அகப்பொருள் இடம் பெறாமல் புறப்பொருள் மட்டுமே இடம் பெற்றுள்ளது. ஆசிரியப்பாவின் ஓசைபிறர்தம் தம்பால் ஈர்க்கும் ஆற்றல் அதன்பால் உள்ளது. சங்க இலக்கியத்தில் 40% விழுக்காடு அமைந்துள்ளதற்குரிய காரணம் அகவிக் கூறுதலே. குறுந்தொகைபாடல் 23 ஆம் பாடலில் இவ்வியல்பினை அறிய இயலும்.

**அகவன் மகளேஅகவன் மகளே**
**மனவுக் கோப்பன்னநன்னெடுங் கூந்தல்**
**அகவன் மகளேபாடுகபாட்டே**
**இன்னும் பாடுகபாட் டேயவர்**
**நன்னெடுங் குன்றம் பாடியபாட்டே**
**(குறுந்தொகை-23)**

இது அகவிக் கூறும் பண்பிற்குச் சான்றாய் அமைந்துள்ளது. ஓசைநயம் செயற்கை முறை என்பர். ஆனால் யாப்பியல் நிலைக்கேற்ப

இயல்பாக வளர்ந்து வாய்ப்பாடுகளாக மலர்ந்தன. ஒலி நயத்தால் வரையறுக்கப்பட்ட ஒழுங்குநிலையேயாப்பென்பர். தொல்காப்பியர் எழுவகை யாப்பு என்பர். இவ்வடிப்படையில் பாக்கள் தோன்றி இலக்கியங்கள் மலர்ந்தன. பண்டைக் காலத்தில் இன்னபா இன்னபாடு பொருளைப் பாடுதல் வேண்டும் என்ற வரையறை இருந்தது.

**நாடகவழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்றபுலனெறிவழக்கம்**
**கலியேபரிபாட்டுஆயிருபாங்கினும்**
**உரியதாகும் என்மனார் புலவா**
**(தொ. அ. நூல் - 59)**

தொல்காப்பியர் அக்காலத்திற்கு முன்பிருந்த இலக்கியக் கூறுகளையும் நாடகக் கூறுகளையும் ஒப்பநோக்கி, அகப்பொருண்மையைக் கலியாலும்பரிபாட்டாலும்பாடுதல்இயல்பு என வரையறுத்தார். தொல்காப்பியர் காலத்திற்குப் பின் வந்த புலவர்கள் தாம் வாழும் காலச் சூழ்நிலைக்கேற்பவும் தம் உணர்ச்சியை முழுமையாக உணர்த்துவதற்கும் எண்ணக் கூறுகளை வெளிப்படுத்துவதற்கும் ஏற்றபாவாக ஆசிரியப்பாவை எண்ணினர். அகப்பாடல்களையும், புறப்பாடல்களையும் அகவற்பாவிலேயே பாடினர். இது இலக்கிய உலகில் திருப்புமுனையாகும். சங்க இலக்கியத்தில் உள்ள அகவற்பாக்கள் 2381 ஆகும். அதில் தனித்தன்மை வாய்ந்த அகவற்பாக்கள் 1700. இப்பாடல்களை 473 புலவர்கள் பாடியுள்ளனர். அதில் 102 பாடல்களைப் பாடிய புலவர்கள் பெயர் தெரியவில்லை. தொல்காப்பியர் கலிப்பாவிற்கும் வெண்பாவிற்கும் தரும் விரிவான விளக்கம் ஆசிரியப்பாவிற்குத் தரவில்லை. அடியடிப்படையில் எட்டுத்தொகை நூல்களை யாப்பறிஞர் பிரித்துள்ளனர். மூன்றடிகள் முதல் ஐந்தடிகள் உள்ளனவற்றை ஐங்குறுநூறென்றும் நான்கடி முதல் எட்டடிகள் உள்ளனவற்றைக் குறுந்தொகையென்றும் ஒன்பதடி முதல் பதிமூன்றடிகள் உள்ளனவற்றை நற்றிணையென்றும் பதிமூன்றடி முதல் முப்பத்தேழு அடி உள்ளனவற்றை அக நானூறென்றும் பாகுபடுத்தி அக இலக்கியங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

**நெய்யொடுமயக்கியஉழுந்து நூற்றன்ன**
**வயலையஞ் சிலம்பின் தலையது**
**செயலையஞ் பகைத்தழைவாழும் அன்னாய**
**(ஐங்குறுநூறு - 211)**

இது மூன்றடிப் பாடலுக்குச் சான்றாகும். மூன்றடியில் தொடங்கி முப்பத்தேழு அடிகள் வரை வளர்ந்தன. எட்டுத்தொகையில் உள்ள பாடல்கள் தன்னுணர்ச்சிப் பாடல்களாகும். அகப்பாடல்கள் யாவும் பல்வேறு அகத்துறையைச் சார்ந்தன. அவற்றை பாடியவர் பலர். அத்துறைகளைச் சிறுசிறு பாடல்களாகப் பாடினர். அதைப் போலப் புறப்பாடல்கள் பலவும் பல்வேறு புறத்துறைகள் கொண்டன. ஒவ்வொரு துறையையும் சிறுசிறு பாக்களாகப் பாடினர். அத்தகைய நிலைமைக்கு அக்காலச் சூழ்நிலையே. அவர்களுக்குப் பின்புலமாக அமைந்தவை இயற்கை, மலை, கடல், வயல், காடு, உயிரினங்களாகும். இதை ஒட்டியே அவர்தம் கருத்துகளைச் சிறுசிறு சொற்றொடர்களாக அகவற்பாவில் பாடி மகிழ்ந்தனர்.

**ஆசிரியப்பாநிலை**

நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு ஆகிய நூல்களில் உள்ள பாடல்கள் 1705 ஆகும். அவற்றுள் 1687 பாடல்கள் நேரிசையாசிரியப்பாவாகவும் பதினெட்டுப் பாடல்கள் நிலைமண்டில ஆசிரியப்பாக்களாகவும் அமைந்துள்ளன. வெள்ளடிகள் உள்ளன. அகப்பாடல்களில் வஞ்சியடிகள் காணவில்லை. இணைக் குறளாசிரியம் இல்லை. பாடல்களின் ஈற்றில் ஏகாரம், ஓகாரம், யகரமெய் இவற்றினைக்கொண்டு நிறைவுறுகின்றன.

ஆசிரியப் பாக்களில் ஐஞ்சீரடி, தனிச்சொல் வருதலைக் காணலாம். புறநானூற்றில் 321 பாடல்கள் நேரிசை அகவற்பாவாகவும் பதினாறு பாடல்கள் நிலைமண்டில ஆசிரியப்பாவாகவும் மற்றவை வஞ்சியடி விரவிய ஆசிரியப்பாவாகவும் ஆசிரியஅடி விரவிய வஞ்சிப்பாவாகவும் கலந்து காணப்படுகின்றன. கலிப்பாக்களால் உருவான கலித்தொகையில் சுரிதக உறுப்பாக ஆசிரியப்பாக்கள் இடம் பெற்றுள்ளன. பாலைக்கலியில் 28 பாடல்களிலும் குறிஞ்சிக் கலியில் 20 பாக்களிலும் மருதக் கலியில் 4 பாக்களிலும் முல்லைக் கலியில் 6 பாக்களிலும் நெய்தற் கலியில் 29 பாடல்களிலும் ஆசிரியச் சுரிதகங்கள் வந்தன. ஆக 87 ஆசிரியப்பாக்கள் கலிப்பாடல்களின் இறுதி உறுப்பாக வந்துள்ளன.

## பதிற்றுப்பத்து

ஆசிரிய அடிகளினால் உருவாகிய பாவினைச் செந்தூக்கு என்றும் ஆசிரியமும் வஞ்சியும் மயங்கிய பாடல்களைச் செந்தூக்கும், வஞ்சித் தூக்கும் என்று வகைமை செய்துள்ளனர். ஒழுகு வண்ணமும் சொற்சீர் வண்ணமும் பெற்றவை பன்னிருபாடல்கள். மற்றவை ஒழுகு வண்ணத்தால் அமைந்தவை. நேரிசை ஆசிரியப்பாவில் 66 பாடல்கள் உள்ளன. வஞ்சியடி விரவிய நேரிசை ஆசிரியப்பா ஆறும் வஞ்சியடி மயங்கிய நிலைமண்டில ஆசிரியப்பாஒன்றும் இணைக்குறயாசிரியம் இரண்டு வந்துள்ளன. பரிபாடலிலுள்ள பாடல்கள் 22 ஆகும். பலபாடல்களில் ஆசிரியப்பா சுரிதகங்களாகவும் நிலைமண்டிய ஆசிரியப்பாசுரிதகங்களாகவும் வந்துள்ளன. பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை முல்லைப்பாட்டு நெடுநல் வாடை குறிஞ்சிப்பாட்டு மலைப்படுகடாம் ஆகிய நூல்களில் வஞ்சியடி பயிலாத நேரிசை ஆசிரியப்பாவாகும். மற்ற நான்கு நூல்களில் வஞ்சியடி பயின்ற ஆசிரியப்பாக்கள் மிடைந்து காணப்படுகின்றன.

சங்க இலக்கிய அகவற்பாக்களில் சிறுசிறு தொடர்கள் சிறுசிறு சொற்கள் எளிமையான, செம்மையான நிலையில் அடுக்கியியம்பும்போது விரைவான ஓட்டத்தையும் வேகமான போக்கையும் காட்டி நிற்பதோடு சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் உத்தியைக் காணலாம். தனித்தனிப் பாடல்களைப் பாடிவந்த புலவர்கள் அந்நிலையை விடுத்து கதைப் பொதிந்த பாடல்களைப் பாட எண்ணினார். அதன் விளைவே நீண்டநெடும் பாடல்கள் அகவற்பாவில் தோன்றின. ஆசிரியப்பாவில் அமைக்கப்படும் அணிகள் விளங்கிக் கொள்வதற்கு எளிதானவை. ஒரு கருத்தை அழுத்தம் திருத்தமாக எடுத்துக்கூறுவதற்கும் இதுவே ஏற்றது. சங்கச் சான்றோரும் அருந்தமிழ்ப் புலமைச் சான்றோரும் தாம் கூறக் கருதிய அரிய உண்மைகளை எடுத்துரைக்க ஆசிரியப்பாவையே மேற்கொண்டனர். அரசர் போன்றாரது செவிகளில் செவியறி ஆணித்தரமாக எடுத்துரைக்க அகவற்பாவே துணை செய்தது.

## பார்வை நூல்கள்

1. தமிழ் இலக்கண நூல்கள், ச.வே சுப்பிரமணியன்.
2. தொல்காப்பிய உரை வளம், ச.வே சுப்பிரமணியன்.
3. இலக்கண வரலாறு, இரா. இளங்குமரன்.
4. தொல்காப்பிய இலக்கிய இயல், தமிழண்ணல்.
5. யாப்பதிகாரம், குழந்தை.
6. இலக்கண உலகில் புதிய பார்வை, பொற்கோ.
7. யாப்பும் நோக்கும், சை.வை. சண்முகம்.